செ.வெ.எண்: 544 நாள்: 01.09.2020

**புதுக்கோட்டை மாவட்டத்தில் போட்டி தேர்வுகளுக்கு தயார் செய்து வரும் இளைஞர்கள் இணையதள வழியாக இலவசமாக பதிவு செய்து பயன்பெறலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் போட்டி தேர்வுகளுக்கு தயார் செய்து வரும் இளைஞர்கள் இணையதள வழியாக இலவசமாக பதிவு செய்து பயன்பெறலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

கிராமப்புற மாணவர்கள் உள்பட அனைத்து போட்டியாளர்களும் பயனடையும் வகையில் தமிழக அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில் ”மெய்நிகர் கற்றல்” என்ற இணையதளம் துவங்கப்பட்டுள்ளது.

இதில் மத்திய, மாநில அரசால் நடத்தப்படும் போட்டி தேர்வுகளுக்கான பாடக்குறிப்புகள், மாதிரித்தேர்வுக்கான வினாவங்கிகள் மற்றும் புத்தகங்கள் ஆகியவை பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. போட்டி தேர்வுகளுக்கு, தயார் செய்து வரும் இளைஞர்கள் https://tamilnaducareerservices.tn.gov.in என்ற இணையத்தில் தங்கள் பெயரை கட்டணமின்றி இலவசமாக பதிவு செய்து பயன்பெறலாம்.

மேலும், கொரோனா ஊரடங்கு காரணமாக போட்டித்தேர்வுகளுக்கான இணையதளம் வழி பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நேரிலோ அல்லது 04322-222287 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

-----------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**